பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

17 09 2025 6.30

புதன்கிழமை மாலை

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- ஏழை மக்களின் நலனுக்காக பணியாற்றுவதே தமது வாழ்க்கையின் லட்சியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- பிரதமரின் பணிகளை அங்கீகரித்து 27 நாடுகள் அவருக்கு உயரிய விருதுகளை வழங்கியுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

- இந்தியாவை வல்லரசாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி பணியாற்றி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

- நீலகிரி, ஈரோடு உள்ளிட்ட 20 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- உலக தடகள சாம்பியன் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் –

ஏழை மக்களின் நலனுக்காக பணியாற்றுவதே தமது வாழ்க்கையின் லட்சியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேசத்தின் Dhar-ல் ஆரோக்கியமான மகளிர் -வலிமையான குடும்பம் இயக்கத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பெண்கள் தங்களுடைய உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு குடும்பத்தின் தூணாகவும் பெண்கள் திகழ்வதாக அவர் குறிப்பிட்டார்.

மகளிர் நலனை கருத்தில் கொண்டு இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்புக்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் உரிய பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அணு ஆயுத அச்சுறுத்தலுக்கு இந்தியா அடிபணியாது என்றும் பிரதமர் திட்டவட்டமாக கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் ஏழை, இளையோர், மகளிர் மற்றும் விவசாயிகள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையிலேயே அவர்களின் மேம்பாட்டில் தமது அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக திரு நரேந்திர மோடி கூறினார்.

*இதற்கிடையே, பெண்களின் நலனுக்காக பிரதமர் தொடங்கி வைத்த இயக்கத்தின் கீழ் நாள்தோறும் ஒரு லட்சம் பெண்கள் பயனடையும் வகையில் நாடுமுழுவதும் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவதாக தகவல் ஒலிபரப்பு இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.*

*இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவை வல்லரசாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் இத்தகைய திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.*

*(சவுண்ட் பைட் – முருகன்-1 – 34 செகண்ட்ஸ்)*

*இந்நிலையில் இந்த இயக்கத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் முகாம்கள் நடத்தப்படவுள்ளதாக மருத்துவப் பணிகள் இணை இயக்குநர் டாக்டர் சாந்தி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் –சாந்தி – 21 செகண்ட்ஸ்)*

*இந்த மருத்துவ முகாம் தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று பயனாளி ஒருவர் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – பயனாளி – 22 செகண்ட்ஸ்)*

*>><><><><<*

*நாட்டு மக்களின் நலனுக்காக பிரதமர் திரு நரேந்திர மோடி ஓய்வின்றி பணியாற்றி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.*

*பிரதமர் திரு நரேந்திர மோடியின் பிறந்த தினத்தையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.*

*நாட்டு நலனுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் பிரதமர் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*இது நாட்டுமக்கள் அனைவருக்கும் உத்வேகம் அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திய பிரதமரை கண்டு நாடு பெருமிதம் கொள்வதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.*

*27 நாடுகளின் உயரிய விருதுகள் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு அமித் ஷா கூறியுள்ளார்.*

*>><><><><<*

*தீவிரவாதிகளுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் தற்காலிகமாகத்தான் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.*

*இன்று ஹைதராபாத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தீவிரிவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்தினால் ஆபரேஷன் சிந்தூர் தொடரும் என்று எச்சரித்தார்.*

*நம்நாட்டு விவகாரங்களில் மூன்றாவது நாடு தலையிட எப்போதும் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் அவர் கூறினார்.*

*சர்தார் வல்லபாய் பட்டேலை போல் உறுதியுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இதன்காரணமாக இந்தியா விரைவில் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்றும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.*

*>><><><><<*

*நீலகிரி, ஈரோடு உள்ளிட்ட 20 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் – செந்தாமரைக் கண்ணன்- 52 செகண்ட்ஸ்)*

*>><><><><<*

*விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே பட்டாசு ஆலையில் நேரிட்ட வெடிவிபத்தில் இருவர் உயிரிழந்தனர். 7 பேர் காயமடைந்தனர்.*

*தொழிலாளர்கள் ரசாயன மூலப்பொருட்களை கலவை செய்து கொண்டிருந்த போது இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ பைட் – கமலக்கண்ணன் – 49 செகண்ட்ஸ்)*

*>><><><><<*

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

*நாமக்கல்லில் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி இன்று ஆய்வு மேற்கொண்டார்.*

----------------

*நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் மத்திய அரசின் சென்னை மண்டல மக்கள் தொடர்பகம் சார்பில் அரசு திட்டங்களின் விழிப்புணர்வு முகாம் மற்றும் கண்காட்சியை சார் ஆட்சியர் திரு ஆயுஷ் குப்தா இன்று தொடங்கி வைத்தார்.*

----------------

*கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயுர்வேத தின பேரணியை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று தொடங்கி வைத்தார்.*

*>><><><><<*

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*உலக தடகள சாம்பியன் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் தகுதிச் சுற்றில் 84 புள்ளி எட்டு ஐந்து மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து அவர், இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.*

----------------

*உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Antim Panghal அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*குரேஷியாவின் Zagreb-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், சீனாவின் Zhang Jin -ஐ வென்றார்.*

*>> End of News <<*